ருகும். நாம் மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருப்பது, ஒவ்வொரு நெசவாளருக்கும் தேவையான நூலை, பவர் லூம் காம்போசிட் மில்லுக்கு என்ன விலைக்கு விற்கிறதோ, அந்த நூலினுடைய விலையை விடக் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்ற முறையை நாம் மத்திய அரசாங்கத்திடம் கேட்டிருக்கிறோம்.

(6) அரசினர் சட்ட முன் வடிவு.

தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு பந்தய (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு பந்தய (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(7) 1975–76 ஆம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 97,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 97,93,000 under Demand No. 10—Milk Supply Schemes be reduced by Rs. 100".